

(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 100.]

பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2019 ஒக்டோபர் 08, செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணிக்கு

சமுகமளித்தோர்:

கௌரவ கரு ஜயசூரிய, சபாநாயகர்

கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

கௌரவ செல்வம் அடைக்கலநாதன், குழுக்களின் பிரதித் தவிசாளர்

கௌரவ ரணில் விக்கிரமசிங்க, பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்

கௌரவ (திருமதி) தலதா அதுகோரல, நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்

கௌரவ ஜோன் அமரதுங்க, சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்

கௌரவ கயந்த கருணாதிலக்க, காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

கௌரவ ரவி கருணாநாயக்க, மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ றிஸாட் பதியுதீன், கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ சாகல ரத்நாயக்க, துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ அஜித் பி. பெரேரா, அமைச்சரவை அந்தஸ்த்தற்ற டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர்

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன், அமைச்சரவை அந்தஸ்த்தற்ற விசேட பிரதேசங்கள் அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ ரவீந்திர சமரவீர, அமைச்சரவை அந்தஸ்த்தற்ற தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்

கௌரவ பைஸால் காசிம், சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர்

கௌரவ இரான் விக்கிரமரத்ன, நிதி இராஜாங்க அமைச்சர்

கௌரவ திலிப் வெதஆரச்சி, கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ அமீர் அலி சிஹாப்தீன், கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ எட்வட் குணசேகர, காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு பிரதி அமைச்சர்

கௌரவ கருணாரத்ன பரணவிதான, திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி பிரதி அமைச்சர்

கௌரவ அப்துல்லா மஹரூப், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை பிரதி அமைச்சர்

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ சிசிர குமார அபேசேகர

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ (கலாநிதி) சரத் அமுணுகம

கௌரவ ஆனந்த அலுத்கமகே

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே

கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்

கௌரவ பியசேன கமகே

கௌரவ நிஹால் கலப்பத்தி

கௌரவ தினேஷ் குணவர்தன

கௌரவ சிசிர ஜயகொடி

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ

கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன

கௌரவ மயில்வாகனம் திலகராஜா

கௌரவ க. துரைரெட்ணசிங்கம்

கௌரவ சிறினால் டி மெல்

கௌரவ பியல் நிசாந்த த சில்வா

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ டக்ளஸ் தேவானந்தா

கௌரவ எஸ். பீ. நாவின்ன

கௌரவ முஹம்மது நசீர்

கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கே.கே. பியதாஸ

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே

கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ அசோக்க பிரியந்த

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த

கௌரவ சாந்த பண்டார

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க

கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா

கௌரவ பிமல் ரத்நாயக்க

கௌரவ பிரசன்ன ரணவீர

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ துலீப் விஜேசேகர

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ சி. சிறீதரன்

கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்

கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா

கௌரவ ஜயந்த சமரவீர

கௌரவ மஹிந்த சமரசிங்க

கௌரவ சந்தித் சமரசிங்க

கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்

கௌரவ ஈ. சரவணபவன்

கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்

கௌரவ (டாக்டர்) சி. சிவமோகன்

கௌரவ முத்து சிவலிங்கம்

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்

கௌரவ லக்ஷ்மன் செனெவிரத்ன

கௌரவ மாவை சோ. சேனாதிராசா

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி

கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி

கௌரவ டீ. பி. ஹேரத்

கௌரவ விஜித ஹேரத்

கௌரவ மனோஜ் ஹேவாகம்பலகே


திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1. சனாதிபதியின் செய்திகள்: சனாதிபதியவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற பின்வரும் செய்தி சபாநாயகரால் வாசிக்கப்பட்டது:—



ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

எனது இல: பிஎஸ்/சிஎஸ்ஏ/00/1/12/7

2019 செத்தெம்பர் மாதம 23 ஆந் திகதி

மாண்புமிகு கரு ஜயசூரிய அவர்கள்
சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, மக்களிடையே அமைதியைப் பேணுவதற்கான தேவையைக் கருத்திற்கொண்டு, முதலாம் அட்டவணையில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள படைதாங்கு சேவைகளின் சகல உறுப்பினர்களும் அதன் இரண்டாம் அட்டவணையில் நிச்சயித்துக் குறிப்பிடப்படும் பிரதேசங்களில் மக்களிடையே அமைதியைப் பேணுவதற்காக அழைக்கப்படுகின்றனர் என ஆணையிடப்படுகின்றது.

அதற்கமைய மேற்படி கட்டளைச் சட்டத்தின் 21(2) அம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2(3) பிரிவுக்கமைய அதனை இத்தால் பாராளுமன்றத்துக்கு அறிவித்தல் விடுக்கின்றேன்.

இங்ஙனம் - விசுவாசமுள்ள

மைத்திரிபால சிறிசேன

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
Democratic Socialist Republic of Sri Lanka

2. சபாநாயகரின் அறிவித்தல்கள்: சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்,—

I

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 79 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2019 செப்தெம்பர் 24 ஆம் திகதி, 'சம்பளச் சபைகள் (திருத்தச்)' சட்டமூலத்திலும், 2019 செத்தெம்பர் 30 ஆம் திகதி, 'ஸ்ரம வாசனா நிதியம் (திருத்தம்)' மற்றும் 'மக்கள் வங்கி (திருத்தம்)' ஆகிய சட்டமூலங்களிலும் 2019 ஒக்டோபர் 02 ஆம் திகதி, வணிகக் கப்பற்றொழில் (திருத்தச்) சட்டமூலத்திலும் என்னால் சான்றுரை எழுதப்பட்டதென்பதை அறிவிக்க விரும்புகிறேன்."

II

"பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க அவர்களினால் 2019 ஆகஸ்ட் 09 திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட விடயம் தொடர்பில் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துவதற்கான பிரேரணையொன்று கொண்டு வரப்படலாம்."

3. பத்திரங்கள் சமர்ப்பித்தல்: (1) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் பயணிகள் அல்லது பண்டங்களுக்கான அனைத்துப் பொதுப் போக்குவரத்துச் சேவைகளும் அத்தியாவசிய சேவைகள் என பிரகடனப்படுத்தல் தொடர்பில் சனாதிபதி அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டு, 2019 ஒக்டோபர் 03 ஆம் திகதிய 2143/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையைச் சமர்ப்பித்து, அக்கட்டளை போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் —

(i) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2019.06.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரின் மூன்றாவது அறிக்கையில் சனாதிபதி செயலகத்தின் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை;

(ii) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2019.06.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரின் மூன்றாவது அறிக்கையில் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, வனப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் கரையோர பேணுகை மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களம் என்பனவற்றின் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை அறிக்கை; மற்றும்

(iii) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2019.06.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரின் மூன்றாவது அறிக்கையில் நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்தின் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2019.06.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரின் மூன்றாவது அறிக்கையில் அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2019.06.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரின் மூன்றாவது அறிக்கையில் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு, இலங்கை நில அளவைத் திணைக்களம், அரசாங்க அச்சுத் திணைக்களம், காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம், காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம் மற்றும் காணி நிர்ணயத் திணைக்களம் என்பனவற்றின் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர், (469 ஆம் அத்தியாயமான) தாவர, வன விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 யூன் 22 ஆம் திகதிய 1920/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகளைச் சமர்ப்பித்து அக்கட்டளைகள் வலுவாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2019.06.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரின் மூன்றாவது அறிக்கையில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம் என்பனவற்றின் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்—

(i) 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ் 2019.07.15 முதல் 2019.09.15 ஆம் திகதி வரையுள்ளவாறு தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பு இலக்கம் 240 இன் கீழ் குறைநிரப்பு உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைப்பாடுகள் பொறுப்புக் கருத்திட்டத்தின் மூலம் செய்யப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பு;

(ii) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் ஓமான் சுல்தான் அரசாங்கத்திற்கும் இடையில் வருமானம் மீதான வரிகள் தொடர்பில் இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்கும் வரி செலுத்தாது தட்டிக் கழிப்பதனைத் தடுப்பதற்குமாக 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 75(1) ஆம் பிரிவின் கீழ் 2018 ஆகஸ்ட் 15 ஆம் திகதி செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை; மற்றும்

(iii) 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, நலன்புரி நன்மைகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் நலன்புரி நன்மைக் கொடுப்பனவுகளுக்கான குறைவருமானம் பெறும் குடும்பங்களை இனங்காண்பதற்கான செயன்முறை தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 செப்டெம்பர் 18 ஆம் திகதிய 2141/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் திருத்தப்பட்டவாறான 2019 யூன் 20 ஆம் திகதிய 2128/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திட்டம்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அக்குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பு, உடன்படிக்கை மற்றும் திட்டம் என்பன அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான ஆயுர்வேத வைத்திய சபையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்—

(i) 2016 - 2017 ஆம் ஆண்டுக்கான ஸ்ரீ லங்கா ஸ்டேட் டிரேடிங் (ஜெனரல்) கோப்பறேசனின் ஆண்டறிக்கை; மற்றும்

(ii) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான லங்கா சதொச லிமிடெட்டின் ஆண்டறிக்கைகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் வியாபாரம் மற்றும் வணிகம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(11) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(12) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2019.06.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரின் மூன்றாவது அறிக்கையில்

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(13) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(14) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(15) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2019.06.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரின் மூன்றாவது அறிக்கையில் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர்வலய அபிவிருத்தி அமைச்சு மற்றும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம் என்பனவற்றின் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(16) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் 12(ஊ) பிரிவின் கீழ் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 யூலை 24 ஆம் திகதிய 2133/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வழிகாட்டுநெறிகளைச் சமர்ப்பித்து அவ்வழிகாட்டுநெறிகள், சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(17) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2019.06.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரின் மூன்றாவது அறிக்கையில் தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சின் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(18) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2019.06.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரின் மூன்றாவது அறிக்கையில் தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சின் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(19) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்—

(i) 2017 ஆம் ஆண்டுக்கான தேசிய விளையாட்டு நிதியத்தின் ஆண்டறிக்கை; மற்றும்

(ii) தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க,விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 41 ஆம் பிரிவின் கீழ் தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரால் தேசிய விளையாட்டுச் சங்கங்கள் தொடர்பில் ஆக்கப்பட்டு, 2019 யூன் 18 ஆம் திகதிய 2128/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை மற்றும் ஒழுங்குவிதிகள், இளைஞர், விளையாட்டுத்துறை, கலை மற்றும் மரபுரிமைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(20) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2019.06.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரின் மூன்றாவது அறிக்கையில் தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவின் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(21) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2019.06.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரின் மூன்றாவது அறிக்கையில் அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் என்பனவற்றின் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(22) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2019.06.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரின் மூன்றாவது அறிக்கையில் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு, தொழில் திணைக்களம் மற்றும் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் என்பனவற்றின் 2017 ஆம் ஆண்டின்

செயலாற்றுகை தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(23) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(24) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2019.06.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரின் மூன்றாவது அறிக்கையில் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சின் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்: (i) சட்டவாக்க நிலையியற் குழுவின் தவிசாளர் கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி சார்பாக கௌரவ எட்வட் குணசேகர அவர்கள், "இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளனம் (கூட்டிணைத்தல்)" எனும் சட்டமூலம் பற்றிய சட்டவாக்க நிலையியற் குழுவின் அறிக்கையையும் அதன் கூட்ட அறிக்கையையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

சட்டமூலம் சட்டவாக்க நிலையியற் குழுவினால் அறிக்கையிடப்பட்டவாறு 2019 ஒக்டோபர் 23 ஆம் திகதி புதன்கிழமை பரிசீலிக்கப்படுமாக.

(ii) அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ எம்.ஏ. சுமந்திரன், குழுவினால் தொகுக்கப்பட்ட, "1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, நாணய சட்டத்திற்கான உத்தேச திருத்தங்கள்" தொடர்பிலான அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

5. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:

(1) கிணிகத்ஹேன, களனிகம, தாகம்பிட்டிய எனும் முகவரியில் வதியும் திருமதி எம்.பி. அஜந்தா வினோதனீயினது 2019.08.13 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ எட்வட் குணசேகர சமர்ப்பித்தார்.

(2) கலவான, நாவலகந்த, தென்னஹேன எனும் முகவரியில் வதியும் திரு. ஜே. கருணாரத்னவினது 2019.07.07 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ கருணாரத்ன பரணவிதான சமர்ப்பித்தார்.

(3) எல்பிட்டிய, பிட்டுவல, நரவெல்கெட்டிய எனும் முகவரியில் வதியும் திரு. கே.எம். சுனில் பத்மசிறியினது 2019.07.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ நிஹால் கலப்பத்தி சமர்ப்பித்தார்.

(4) (i) பொலொன்னறுவ, சுற்றுவட்ட வீதி, இல. 382/2ஏ யில் வதியும் திரு. ஏ.என். விக்கிரமசிங்கவினது 2019.08.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) ஹிங்குரக்கொட, கிராம உதயம், சுற்றுவட்ட வீதி எனும் முகவரியில் வதியும் திரு. வை.எம். சுனில் யாப்பா பண்டாரவினது 2019.07.17 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்ன சமர்ப்பித்தார்.

(5) யட்டியந்தொட்ட, கொமாடுவ, மீபிட்டிகந்த வீதி எனும் முகவரியில் வதியும் திருமதி ஐ.எம். சிரிமா குணவர்தனவினது 2019.06.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவை ளெரவ சுஜித் சஞ்ஜய பெரேரா சமர்ப்பித்தார்.

(6) கந்தளாய், லைட் வீதி, இல. 174/71பீ இல் வதியும் திரு. எம்.பி. சனத் றோஹித பிரேமகுமாரவினது 2019.07.06ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சந்தித் சமரசிங்க சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

6. கம்பெனிகள் (திருத்தம்) : கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2019 ஒக்டோபர் 23 ஆம் திகதி புதன்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக எனவும், அது அச்சிடப்படுமாக எனவும் அது உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுமாக எனவும் கட்டளையாயிற்று.

7. விளையாட்டுக்கள் தொடர்பான தவறுகளை தடுத்தல் : தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம், — விளையாட்டுக்களில் ஆட்ட நிர்ணயம், ஊழல், சட்டவிரோதமான சூழ்ச்சித் திறனுடன் கையாளுதல் மற்றும் சட்டவிரோதமான பந்தயம் பிடித்தலைத் தடுப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் தவறுகளைப் புலனாய்வு செய்வதற்காக விசேட புலனாய்வுகள் அலகொன்றை நியமிப்பதற்கும் அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்தற்குமானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2019 ஒக்டோபர் 23 ஆம் திகதி புதன்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக எனவும், அது அச்சிடப்படுமாக எனவும் அது உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுமாக எனவும் கட்டளையாயிற்று.

8. பாராளுமன்ற அமர்வுகள் (இல. 1) : பாராளுமன்றச் சபை முதல்வர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2019 ஒக்டோபர் 23 ஆம் திகதி, புதன்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 7.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 6.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 7.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9. பாராளுமன்ற அமர்வுகள் (இல. 2) : பாராளுமன்றச் சபை முதல்வர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2019 ஒக்டோபர் 23 ஆம் திகதி, புதன்கிழமை மு.ப. 10.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10. சட்டமூலம் கொண்டுவர அனுமதி : கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா வழிமொழிய கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி சமர்ப்பித்த சட்டமூலம்,— " 1986 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ - தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) " சட்டத்தைத் திருத்துவதற்கானாதொரு சட்டமூலம்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 52 (6) இன்கீழ் அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

11. பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி : கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 36 ஆம் பிரிவின் கீழ், 1988 யூன் 2 ஆம் திகதிய 508/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012 ஓகஸ்ட் 30 ஆம் திகதிய 1773/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் இறுதியாகத் திருத்தப்பட்டதுமான ஒழுங்குவிதிகள், உடனடியாக வலுப்பெறும் வகையில் அதிமேதகு சனாதிபதி அவர்களின் ஒப்புதலுடன் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 சனவரி 24 ஆம் திகதிய 2055/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

12. இலங்கை சுற்றாடலியல் தொழில் வல்லுநர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் : இரண்டாம் மதிப்பீட்டிற்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக" என காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் அதன்படி இரண்டாம் முறை மதிப்பிடப்பட்டு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 53 (3) இன்படி சபாநாயகரால் சட்டவாக்க நிலையியற் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

13. ஒத்திவைப்பு (முல்லைத்தீவு நீதிமன்றக் கட்டளையை மீறியமைக்கு எதிரான உரிய நடவடிக்கை) : "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்றம், அதன் இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க பி.ப. 2.00 மணிக்கு, 2019 ஒக்டோபர் 23 ஆம் திகதி புதன்கிழமை மு. ப. 10.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.